"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஞு புரட்டாசிமீ 28-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 37-ம் இல.

## வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்ற
# கல்விமுறைத்திருத்தம் அவசியம்

— வண. எமில் பின் சுவாமியார்

சென்ற ஒருமாத காலமாக இலங்கையில் வண. எமில் பின் சுவாமியார் இந்நாட்டின் பல பிரச்சினைகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து வந்திருக்கின்றார். இக் குருவானவர் யேசுசபைத்துறவி. உலகில் பெயர்பெற்ற "கிறகோரியன்" சர்வகலாசாலையில் சமய சமூகக்கலைகளின் பேராசிரியர். இவரது தலைமையில் உலகில்பல பாகங்களிலுமுள்ள யேசுசபைக் குருமார் எவ்வாறு வத்திக்கான் சங்கத்தின் முடிபுகளுக்குத்தக தொண்டாற்றலாமென யோசித்துவருகின்றனர். இலங்கையிலுள்ள யேசுசபையினர் அண்மையில் இவர் தலைமையில் தமது ஆலோசனைகளை நடாத்தினர். இந்நாட்டின் பலபிரச்சினைகளையும் ஆராய்ந்து கத்தோலிக்கர்கள் எவ்வாறு நடந்துகொள்ள யேசுசபைக் குருமார் உதவ வேண்டுமென்று அவர் அறிந்து கொண்டார். இந்நாட்டின் முக்கிய பிரச்சினை உணவுப்பிரச்சனையென்றும், உணவு உற்பத்தி செய்வதிலும் கைத்தொழில்கள் நடத்துவதிலும் கத்தோலிக்கர் தீவிரமுயற்சி செய்யவேண்டுமென்பதும் அவரது முடிபு. மேலும் இலங்கையில் வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க இந்நாட்டுக்கல்விமுறை விரைவாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

## கோறிய குருவேதசாட்சிகள்

கோறியாவிலே 1860ஆம் ஆண்டுக்கும் 1866ஆம்ஆண்டுக்மிடையில் நடைபெற்ற பயங்கர வேதகலாபனையின்போது கொலையுண்ட 24குருவேதசாட்சிகள்வருகிற ஐப்பசிமாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆருவது சின்னப்ப பாப்பரசரால் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படவிருக்கின்றார்கள். கோறியவேத விரோதிகள் நடத்திய இந்தவேத கலாபனை காரணமாகக் கொலையுண்டு வேதசாட்சிகளான இந்த 24 குருப்பிரசாதிகள் கோஷ்டிக்கும் ஒருபிரான்சியரான வண. சைமன் பேர்ணே சுவாமியார் தலைமை தாங்கிச்சென்றார். இத்திருப்பட்ட விசாரணை இற்றைக்கு 50 வருடங்களின்முன் ஆரம்பமானது.

## ஒரு வீண் வதந்தி

6-வது சின்னப்ப பாப்பரசர் தமது 75-ம்வயது நிறைவானதுடன் அதாவது 1972-ம்வருடம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள முடிவுசெய்துவிட்டாரென யாரோ ஒரு வீண் வதந்தியை உண்டாக்கி விட்டனர். இவ்வதந்தி வெறும்கட்டுக்கதையேயெனவும் சற்றேனும் அதில் உண்மையில்லையெனவும் வத்திக்கான் அறிவித்திருக்கின்றது.

## புதிய தேசத்துக்குப் பாப்பரசரின் வாழ்த்து

ஆபிரிக்க கண்டத்தில் பிரித்தானியதேசத்தவர் ஆண்டுவந்த தேசங்களில் இறுதியானதான சுவாசிலாந்து சென்றவாரம் சுதந்தரம் பெற்றபோது பரிசுத்ததந்தை அத்தேச மன்னர் சொப்பூசா அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் அந்நாட்டில் சீரும்சிறப்பும் செழித்தோங்க தேவனிடம் மன்றாடுவதாக உறுதிகூறி, அத்தேசசனத்தொகையில் எட்டில் ஒரு பாகத்தவரான கத்தோலிக்கர் தேவனுக்கும் அரசனுக்கும் பிரமாணிக்கம் உள்ளவர்களென எடுத்துக்காட்டினார். அத்தேசத்தின் முன்னேற்றத்துக்காக வத்திக்கான் முன்போல அயராது உழைத்துவருமெனவும் பரிசுத்த தந்தை அரசனுக்கு வாக்களித்து, கத்தோலிக்கமக்கள் பூரண சுதந்தரத்துடன் தமது சமயத்தை அனுசரித்துவர சகலவசதிகளையும் முன்போலப் பெற்றுவர அரசனிடம் விண்ணப்பித்தார்.

### கத்தோலிக்க தனியார் பாடசாலைகள்
## விசாரணைக்குழுக்களின் அறிக்கைகள் வருடமுடிவில்

கத்தோலிக்க தனியார் பாடசாலை மேலும் தொடர்ந்து நடத்துவதா, அன்றேல் அரசாங்கத்தினிடம் கொடுத்துவிடுவதாஎன மேற்றிராணிமார் முடிவுசெய்ய ஆலோசனை கூற நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் இரண்டும் தமது வேலைகளைத்துரிதமாகச் செய்துவருகின்றன. ஒரு குழு இலங்கைக் கத்தோலிக்க சங்கத்தலைவர் திரு. குருகுலசூரியர் தலைமையில் இயங்குகின்றது. மறுகுழு கத்தோலிக்க பள்ளிக்கூடங்களை நடத்திவரும் சந்நியாசசபையினரின் பிரதிநிதிகளை அடக்கியது. இருகுழுவினரும் கொடுக்கும் ஆலோசனைகளை மேற்றிராணிமார் மேலும் தேறஆராய்ந்து இது கருமமாக ஒரு முடிவுக்குவர இருக்கின்றனர்.

## வைத்தியசாலை அத்திவாரக்கல் நடுதலில்
# பலசமய கூட்டுச்சடங்குகள்

மாறவில வைத்தியசாலைக்கட்டிடத்தைப் பெருப்பிப்பதற்காக ஒரு புதிய கட்டிடத்துக்கு சென்றவாரம் அஸ்திவாரக்கல் இடப்பட்டது. அத்தருணம் பலசமய கூட்டுச்சடங்குகள் நடந்தன— அத்திவாரக்கல்லை அப்பகுதி பௌத்த ஆலய சிரேஷ்டர் யக்கடசாவ சிறி தம்ம தேருவும் கத்தோலிக்க விசாரணைப்பங்குக் குருவானவர் வண. அல்பிறெட் லொபோ அடிகளும் கூட்டாக இட்டனர். சடங்குகள் அங்கிளிக்கன்சபைக் குருவானவரின் செபங்களுடன் ஆரம்பமாயின. அதன்பின் பௌத்த முறைப்படி "பிரித்" ஓதப்பட்டது. இறுதியில் நடந்த பொதுக்கூட்டத்துக்கு அப்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரும் வர்த்தகமந்திரியுமான திரு. ஹியூ பெர்ணாந்து தலைமை வகித்தார்.

## டக்டர் சலாசர் குணமடைகின்றார்

போர்த்துக்கால் தேசத் தலைவர் டக்டர் சலாசர் 79வயது நிரம்பியவர். சென்ற 36வருடமாக அத்தேச பிரதமராகக் கடமையாற்றிவருகிறார்: சென்றவாரம் அவர் ஒரு விபத்துக்குள்ளாகி சத்திரசிகிச்சை செய்யப்பட்டார். இப்போது அவர் குணமடைந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

## செக்கோசிலவாகிய மக்களுக்கு கறிற்றாஸ் உதவுகின்றது

கத்தோலிக்க தர்மஸ்தாபனங்களுள் ஒன்றாகிய கறிற்றாஸ் பிற நாடுகளில் கதியற்றுத்தவிக்கும் செக்கோசிலவாகிய மக்களுக்கு உதவமுன் வந்திருக்கின்றது; கொமியூனிஸ்த படையெடுப்பின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான அத்தேசமக்கள் திக்கற்றுத் திகைக்கின்றனர்.

## மேலும் 3 அமலோற்பவசபைத் தியாகிகள்

அமலோற்பவசபைத் தியாகிகளின்சபையில் இலங்கைக்குருமாராக மேலும் மூவர் அண்மையில் அபிஷேகம் செய்யப்பட இருக்கின்றனர். அவர்களில் இருவர் யாழ்ப்பாணக் குடும்பங்களுக்குச் சேர்ந்தவர்கள். இம்மூவரும் முறையே வண. மேள் மெண்டிஸ், றெஜினேல்ட் ஏபிரகாம், பிரான்சிஸ் டானியல் என்னும் பிறதர்மார்களே. பிறதர் றெஜினேல்ட் சில்லாலையைச்சேர்ந்த திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களின் புத்திரன். இவர் இம்மாதம்28-ம் திகதி மருதானை பத்திமா கோவிலில் குருப்பட்டம் பெற்றுக் கொள்ளுவார். பிறதர் பிரான்சிஸ் டானியேல் அவர்கள் ஆசனக்கோவில் விசாரணைப்பங்குக்குச் சேர்ந்த திருமதி டானியேலின் ஏகபுத்திரன். இவரதுகுருப்பட்டம் ஐப்பசி 5-ம்திகதி நடைபெறும். இவர் ஆசனக்கோவிலில் ஐப்பசி 7-ம்திகதி காலை6-15 மணிக்குத் தமது முதற்பலிபூசை ஒப்புக்கொடுப்பார்.

## பாப்பரசரின் அன்பளிப்புகள்

தென்அமெரிக்க பகோட்டாநகரில் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தங்கியிருந்த நாட்களில் வறியமக்களுக்குச் சேவைசெய்யும் நிலையங்களுக்கு பலபெரும் அன்பளிப்புகள் செய்திருக்கின்றார். கைத்தொழிற்சாலை ஒன்று 200 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கத்தக்கதாக சற்பிரசாத மகாநாட்டின் நினைவாகக் கட்டிஎழுப்ப சுமார் ஐந்து இலட்சம்ரூபாய் அளித்திருக்கிறார். இந்தப்பயிற்சிச்சாலை சற்பிரசாதமகாநாடுநடந்த இடத்திலேயே கட்டிஎழுப்ப முடிவு செய்யப்பட்டது. இத்துடன் பலவறியஸ்தாபனங்களுக்குப் பரிசுத்ததந்தை ஏராளமான உதவிகளைச் செய்து சென்றிருக்கிறார்.

## "மெசெஞ்சர்," பத்திரிகை ஆசிரியரின்மாற்றம்

இலங்கையில் ஆங்கில கத்தோலிக்க பத்திரிகையாகிய "மெசெஞ்சர்" பத்திரிகையின் ஆசிரியராகிய வண. மொன்சிஞ்ஞோர் மணிக் முத்துக்குமாரு சுவாமியவர்கள் சென்ற பன்னிரண்டு வருடகாலமாக அக்கடமையை ஆற்றிவந்ததன்பின் சென்றவாரம் அவ்வேலையிலிருந்து மாற்றம் பெற்றிருக்கின்றார், இக்காலத்தில் "மெசெஞ்சர்" பத்திரிகை அரும்பெரும் வேலைகளைச் செய்திருக்கின்றது. கிழக்குத்திசைக் கத்தோலிக்க பத்திரிகைகளில் மிகச்சிறந்ததோர் பத்திரிகையென மேல்நாட்டிலும் அறியப்பட்டிருக்கின்றது. சந்தாக்காரர்களின் தொகையும் பத்திரிகையின் பொருளடக்கமும் பெருமளவில் விசாலித்திருக்கின்றது. சென்ற சிலவருடங்களாக முத்துக்குமாரு அடிகளார் வத்திக்கானில் நிலைபெற்றிருக்கும் விசுவாசப்பரப்புதல்சபையின் ஓர் ஆலோசகராகவும் கடமையாற்றிவருகின்றார். இந்நாட்டிலும், கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமைக் கருமங்களையும், வேதப்பரப்புதல் கருமங்களையும் மேற்பார்வைசெய்து வருகின்றார். சுவாமியார் வெள்ளவத்தை புனித லோறன்ஸ் கோவிற்பகுதிக் கட்டளைக்குருவாகச் சென்றவாரம் தொடக்கம் கடமையாற்றுகின்றார். "மெசெஞ்சர்" பத்திரிகை ஆசிரியராகச் சென்ற 12வருடங்களுக்கும் அவர் செய்துவந்த அரும்பெரும் சேவைகளுக்கு இலங்கைக் கத்தோலிக்கரின் நன்றி அவருக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாதி—1968

29 ஞா. புனித மிக்கேல் அதிதூதரின் ஆலய அபிஷேகம் [வெ]
30 தி. புனித எரோனிமுஸ் [வெ]

**ஐப்பசிமாதம்**

1 செ. கிழமைப் பூசை [ப]
2 பு. புனித காவல் தூதர் [வெ]
3 வி. புனித குழந்தை யேசுவின் தெரேசம்மாள் [வெ]
4 வெ. புனித பிரான்சிஸ்கு [வெ]
5 ச. சனிக்கிழமையில் புனித மரியன்னையின் பூசை, [வெ]


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஞூ புரட்டாசிமீ 28-ங்வ


## கருவியும் கருத்தும்

இத்தாலிய நாட்டில் மாட்டா என்ஞெரு கிராமமுண்டு. அக்கிராமமக்கள் ஓர் அபூர்வமான வழக்கத்தைப் பின்பற்றி வருகின்றனர். வருடத்திற் கொருமுறை அங்கு தேவதாயாரின் சுற்றுப் பிரகாரமொன்று நடைபெறும். அச்சுற்றுப்பிரகாரத்தில் தொழிலாளரெல்லாம் தமது தொழிற் கருவிகளைத் தாங்கியபடி செல்வர். ஊர்வலம் கோயிலையடைந்ததும் ஒவ்வொரு தொழிலாளியும் தன் கருவியை மாதாவுக்கு அர்ப்பணம் செய்கிறுன். அச்சடங்கு முடிந்ததும் கருவிகளை திரும்பவும் வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர். ஆனுல், அக்கருவிகளுக்கு ஒரு புதிய மகத்துவம் ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில், இப்போது அவை மாதாவின் கருவிகள்.

சற்றுச் சிந்தித்தால் இந்தக் கருத்து தொழிலாளியின் மனதில் எத்தகைய மாற்றத்தை உண்டுபண்ணும் என்பதை உணரலாம். கருவிகளை உபயோகிக்கும் ஒவ்வொரு கணமும் அவை மாதாவின் உடைமைகள் என்பதை நினைவுகூர்வான். ஆகவே, அவற்றைத் தீங்கான வழியில் உபயோகப்படுத்தத் துணியமாட்டான். தேவனை மகிமைப்படுத்தும் பொருட்டுத் தன் கையில் மாதாவினுல் ஒப்படைக்கப்பட்ட கருவியைத் தக்கபடி பயன்படுத்துவான்.

நாமும் எமது கருவிகளைத் தேவதாயாருக்கு மானசீகமாக அர்ப்பணித்தால் அது எமது தொழிலை மேன்மைப்படுத்துமல்லவா? தேவனின் அருளினுலும் மரியன்னையின் பாதுகாவலின்கீழும், உழைப்பை விரும்பவும், சோம்பலை வெறுக்கவும், அது எம்மைத்தூண்டும் உழைப்பின் மேன்மையை உணர்ந்து, தொழிலாற்றுவோம். அதற்காக வெட்கப்படமாட்டோம்.

இன்று தொழில்செய்பவர் மத்தியில் பல தீங்குகள் மலிந்துள்ளதைக் காண்கிறேம். வருவாய் ஒன்றினையே கருதி வாழ்பவர், செய்வனவற்றைத் திருந்தச் செய்யாது, தாம் பெறும் ஊதியத்துக்குத் தக்க உழைப்பை நல்காது ஏமாற்றுகின்றனர்.

எமது வேலையை மாதாவின் கைமூலம் தேவனுக்கு அர்ப்பணித்தால் தரம் குறைந்த வேலையைச் செய்ய ஒருபோதும் மனமொப்பமாட்டோம். அதுமட்டுமல்ல, சாதாரண தொழில்களெல்லாம் தேவனுக்குப் பிரியமுள்ளதாயும் செய்வோருக்குப் பெறுபேறுகளை ஈட்டிக்கொடுப்பதாயும் அமையும். நீதி, பிறர் சிநேகம் ஆகிய நற்கருத்துக்களை மனதிற்கொண்டு, தேவனின் மகிமைக்காகவும் பிறரது நலனுக்காகவும் உழைப்பதற்குத் துணை புரியும். அவ்விதம் செய்யப்படும் ஒவ்வொரு கிருத்தியமும் ஒரு செபத்துக்கு சமனாகும்.

# பத்துக் கற்பனை

**கத்தோலிக்கநற்சிந்தனை என்றதலைப்பில் திரு. பி.சவரிமுத்து அவர்கள் இலங்கை வாஞெலியில் ஆற்றிய உரையைத் தழுவியது**

### பிறரன்பு 3

இறைவன் உலகுக்கு வெளிப்படுத்திய பத்துக் கற்பனைகளை இறையன்பு, பிறரன்பு என்று இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்க முடியுமென்று முன்பு குறிப்பிட்டிருக்கிறேம். முதல் மூன்று கற்பனைகளும இறையன்பைச் சார்ந்தவை. ஏனைய எழு கற்பனைகளும் பிறரன்பைச் சார்ந்தவை எனலாம். பிறரன்பு என்பது சுயநலத்தை அடிப்படையான அன்பு அல்ல என்பதை நாம் ஆரம்பத்தில் வற்புறுத்த விரும்புகிறேம். "உன்னை நேசிக்கிறவர்களை நீநேசித்தால் அஃதால் உனக்குஎன்ன பயனுண்டு?" என்று எமது திரு மீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதர் தாமேகூறியிருக்கிருர். மேலும் இதை வற்புறுத்தும் நோக்கமாக எமக்குத் தீமை செய்கிறவர்களுக்கே நாம் தேடி நன்மை செய்ய வேணடுமென்று அவர் கட்டாயப்படுத்திக் கூறியிருக்கிருர். "உனக்கு வலக்கன்னத்தில் அடிப்பவனுக்கு உனது இடக்கன்னத்தையும் கொடு"என்று அவர் போதித்திருக்கிருர். "உன் சத்துராதிகளையும்நேசி" என்று எம்மைப் பணித்திருக்கிருர்.

எனவே "பிறர்"என்று நாம் இங்கு குறிப்பிடுவது எம்மைச் சுற்றி எமது சமுதாயத்தில் வாழும் சகலமக்களையுமே. பிறர் என்ற சொல்லில் எங்கள் குடும்பத்தைச்சேர்ந்த பிதா, மாதா, சகோதரர், சகோதரிகள், எங்கள் இனசனர், உற்ருர் உறவினர், எமது கிராமத்தில், நகரில், நாட்டில் இல்லை அகில உலகிலும் வாழும் சகலமக்களும் அடங்குவர்.

நாம் நம் பிறப்பாலேயே பற்பல சமூகங்களின் உறுப்பினராகின்றேம். ஒரு குடும்பம், ஒரு மொழி, ஒரு சமயம், ஒரு நகரம், ஒரு சாதி, ஒரு நாடு என்ற பல தொகுதிகளைச் சேர்ந்தவர்களாய் இருக்கிறேம். ஆனுல், எமது குடும்பத்தைச் சேராத, எமது மொழியைப் பேசாத, எமது மதத்தைத் தழுவாத எமது நகரத்தை அறியாத, எமது நாட்டைப்பற்றிக் கேள்விப்படாத கோடாகோடிமக்கள் உலகில் வாழுகின்றனர். நாம் ஒவ்வொருவரும் இக்கோடிக்கணக்கான மற்றவர்கள்மேல் நேச மனப்பான்மை உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். "பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறுயோ அதையே நீ பிறருக்கும் செய்ய வேண்டும்"என்ற எமது இரட்சகராகிய யேசுக்கிறிஸ்து நாதரின் ஞானவார்த்தைகளை நாம் எம் மனத்தில் ஆழமாகப் பதித்து அவற்றிற்கிணங்க ஒழுக வேண்டும்.

தேவனின் நான்காம் கற்பனையாகிய "உன் பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்பது எமது பெற்றேர் எமது சகோதரர், சகோதரிகள், எமது தலைவர்கள், அதிகாரிகளுக்கு நாம் பாவமில்லாத விஷயங்களில் அமைந்து நடக்க வேண்டியவர்களாய் இருக்கிறேம் என்றகடமையை வற்புறுத்துகிறது. எமது பெற்றேருக்கு நாம் அன்பு காட்டவேண்டும். நமது அரசாங்க அதிகாரிகளுக்கு அமைந்து வாழ நாம் கடமைப்பட்டிருக்கின்றேம்.

எவ்வாறு எமது திரு மீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதர் தமது பெற்றேருக்கு (முப்பது வருடகாலமாக) அன்பு காட்டி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து வந்தாரோ, அவ்வாறே நாமும் எம் பெற்றேருக்கும் பெரியோருக்கும் ஏனையோருக்கும் அன்பும் பணிவும் உள்ளவர்களாக வாழ வேண்டும்.

"செசாருக்குரியதைச் செசாருக்குக் கொடுங்கள்"என்ற அவருடைய அருட்போதனைக்கேற்க எமது நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் நாம் அமைந்து நடக்கவேண்டும். பொது அதிகாரிகளுக்குத் தகுந்த மரியாதை செலுத்த வேண்டிய அவசியத்தை மேற்கூறிய வாக்கு நன்கு விளக்குகிறதன்றே. அதிகாரிகள் என்று கூறுமிடத்து விசேஷமாகச் சமய அதிகாரிகளை நாம் மறத்தலாகாது. கத்தோலிக்க சமய அதிகாரிகளைப் புறக்கணித்தல் கிறிஸ்துநாதரையே ஒருவன் புறக்கணிக்கிறதற்குச் சமானமாயிருக்கிறது என்று அவர் எங்களுக்கு எடுத்துவிளக்கியிருக்கிருர்.

இவ்வாறே ஏனைய பற்பல சமயத் தலைவர்களுக்கும் அச்சமயத்தைச் சேர்ந்த மக்கள் அன்பும் மரியாதையும் காட்டி வாழவேண்டுமென்று சொல்லாமலே விளங்கும்.

---

● ஜமேய்க்காதீவிலே கரும்புப் பயிர்களை நாசஞ்செய்துவரும் ஒரு வகைப் பெருச்சாளிகளைக் கொலவதற்காக இந்தியகீரிகளின் உதவிநாடப்பட்டது. அதன்பேரில் இந்தியகீரிகள் அங்கு இறக்குமதிசெய்யப்பட்டன. படைகளையே நடுங்கவைக்கும் பாம்புகளைத்தானும் ஒருகைபார்க்கும் இந்தக் கீரிகள் ஜமேய்க்காதீவிலுள்ள பெருச்சாளிகளையெல்லாம் ஒருங்கே கொன்று ஒழித்துவிட்டன.

● உலகிலேயே முதன்முதலாக ஜப்பான் 1,050கோடிரூபாசெலவிலே ஒருபிரமாணடமான விஞ்ஞான நகரைக் கட்டிவருகிறது. இது ரோக்கியோ தலைநகரிலிருந்து 40மைல் தூரத்திலுள்ளது. இது கட்டிமுடியுமிடத்து அங்கு பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் முக்கியஸ்தர்களாக விளங்குபவர்களும், அவர்கள் குடும்பங்களுமாகப் 1,60,000பேர் அதிலே சகல விதசம்பத்துகளுடன் சம்பிரமமாக வாழக்கூடிய வசதியிருக்குமாம.

● நோர்வேதேசஅரசரின் பட்டத்துக்குமாரனை 31வயதுடைய ஹறல்ட் இளவரசருக்கும் ஒருசாதாரண குடும்பத்தினரான ஒருவர்த்தகரின் குமாரத்தியான 31வயதுடைய சொன்சா ஹறல்ட் கென் என்ற அழகிக்கும் சென்ற29ஆம்திகதி வியாழக்கிழமை ஒஸ்லோநகர் லுத்தேர்சபை ஆசனக்கோவிலில் திருமணம் நடந்தேறியது. அதற்கு நான்குஅரசர்களும், அரசிகளும் ஜனுதிபதிகளும் உட்பட 225பிரமுகர்கள் சமூகமளித்திருந்தார்கள்.

● பொகொட்டாநகர் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குச் சமுகங்கொடுக்குமாறு கிழக்குஜேர்மன் கம்யூனிஸ்த அதிகாரிகள் நான்குகுருமாருக்கு அனுமதிவழங்கினுர்கள். இவர்களில்ஒருவர் கிழக்குபேர்ளின் மேற்றிராசன வாரச்சஞ்சிகையான "சென் ஹெட்விக்ஸ்பினற்"றின் பிரதம ஆசிரியரான வண. ஓட்ரோ குறேப் கவாபியர்.

## "பறக்கும் கன்னியாஸ்திரி"

"பறக்கும் கன்னியாஸ்திரி" என்று பெயர்பெற்ற ஒரு பெண்மணி ஐக்கிய அமெரிக்க தேசத்தில் தேவதொண்டு ஆற்றிவருகின்ருர். இவரது உண்மையான பெயர் சிஸ்ரர் மேரி அக்குவைனஸ் என்பதே. இவர் பிரான்சிஸ்கன் கிறிஸ்தவ தர்மகன்னியர் சபையைச் சேர்ந்தவர். இன்று இவரது வயது 73. இவர் 40 வயதுடையவராக இருக்கும் போது விமான சேவையில் ஈடுபட்டார். 1943-ம்ஆண்டு முதன் முதல் விமானத்தைச் செலுத்திஞர். இன்று "மேஜர்" பட்டத்துக்குரியவர். ஓர் இராணுவ ஜெற்விமானத்தை ஓட்டிச் சென்ற முதல் கன்னியாஸ்திரி இவரே. தான் முதன்முதல் பறந்துசென்ற அனுபவத்தைப்பற்றி அவர் கூறியதாவது: "இது மறக்கமுடியாத ஓர் அனுபவம்; எனது கன்னியர்தொண்டில் தேவனுடைய மகிமைக்காக எனக்கு இடப்பட்டசேவை எனவே இதை மதித்துக்கொண்டேன்."

## "நிருபத்துக்கு அமைந்து நடப்பது கத்தோலிக்கருக்கு இன்றியமையாதது" என்கிருர் பாப்பரசர்

பரி. பாப்பரசர் அண்மையில் பிறப்பு ஒழுங்கைப்பற்றி அகில உலகத்துக்கும் அனுப்பிய நிருபத்தை கத்தோலிக்கர் தாம்தாம் விரும்பியவண்ணம் விளக்கங் கொடுப்பதைக் கடுமையாகப் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் கண்டித்திருக்கிருர். மேற்கு ஜேர்மனி தேசத்தில் கத்தோலிக்கா பல்லாயிரக்கணக்காஞேர் எஸ்ஸென்நகரில் கூடியிருந்த ஒரு விழாவிலே ஒரு விசேஷசெய்தி அனுப்பிய பரிசுத்த தந்தை நிருபத்துக்கு அமைந்து நடப்பது இன்றியமையாதது என அறிவித்திருந்தார். இந்தச் செய்திக்கு அக்கூட்டத்திலே விசேஷ இடம் கொடுக்கப்பட்டது. அதை ஜேர்மணதேச பிரதான கத்தோலிக்க அதிகாரியாகிய கருதிஞல் டூப்னர் அவர்களே மக்களுக்கு வாசித்தார். செய்தியின் முக்கியத்துவத்தை விளக்கவே இவ்வாறு செய்பப்பட்டது என்பது வெளிப்படை.

---

● கொலம்பியா நாட்டிலே 5,000 பேரைக்கொண்ட ஒரு யூதசமூகமும் இருந்துவருகின்றது. இவர்களின் பதிலாளிகளாய்வந்த யூதபிரமுகர்கள் கோஷ்டியையும பாபபரசர் பொகொட்டாநகரிலுள்ள தமது ஸ்தானிகரின் மாளிகையில் வரவேற்று உபசரித்து அவர்களுடன் சம்பாஷனை நடத்திஞர்.

● கனடாவைச்சேர்ந்த லங்குவர் தீவிலே 27வயதுடைய போல் பறி என்பவர் 52மணித்தியாலம் தொடர்ந்து ஸ்பானியபாஷையைக் கற்று அதனை இலக்கணப்பிழையின்றியும், நல்லஉச்சரிப்புடனும்பேசி ஒருசாதனையை நிலைநாட்டியிருக்கின்ருர். முன்பு இவருக்கு ஸ்பானியபாஷையே தெரியமாட்டாது. அதனைப்பயின்றபின் ஒரு ஸ்பானிய குழுவினருடன் அவர் சம்பாஷித்தபோது அவர்களெல்லாரும் பிரமித்துப்போயினராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த அந்நியர் யார்?

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 1மணி. மழை பாட்டம் பாட்டமாகக் கொட்டியது. நடுக்கும் குளிர். தம்பதிகள் இருவர். ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். பிலடெல்பியா நகரில் பிரயாணிகள் தங்கும் பல விடுதிகளின் வாயில் படிகளில் ஏறி இறங்கிவிட்டனர். எங்கும் இடமில்லை என்ற ஒரே சொல்தான். பெரும் ஏமாற்றம். இறுதியாக ஒரு சிறு விடுதியின் எழுத்தாளர் அறையில் நுழைந்தனர். இரவைக் கழிக்க இடம் கிடைக்குமா என ஏக்கமான தொனியில் கேட்டனர். 'இந்நகரில் பல மாநாடுகள் நடந்து கொண்டிருப்பதால் காலியாக ஓர் அறையும் இல்லை. இருப்பினும் என்னுடைய அறை இருக்கின்றது. அதில் சென்று இரவைக் கழியுங்கள். உங்களை இந்தக் கொட்டும் மழையிலும் நடுக்கும் குளிரிலும் அனுப்ப என் மனம் இடம் தாராது. நான் எங்காவது முடங்கிக் கொள்வேன்'' என்றார் இந்த இளம் எழுத்தாளர். விடுதியை விட்டுச்செல்லுமுன் அறை வாடகையைக் கொடுத்த பொழுது, ''அமெரிக்க ஐக்கியநாட்டில் ஒரு பெரும் விடுதியை மேற்பார்க்கும் தகைமை உமக்குத்தான் உண்டு. பயணிகள் தங்கும் ஒரு பெரும் விடுதியை உமக்காக ஒருவேளை நாங்கள் கட்டி முடிக்கலாம்'' என்றுகூறிச் சென்றனர் முன்பின் தெரியாத இந்த முதிய தம்பதிகள். இந்த இளம் அலுவலகர் அப்பொழுது சிரித்தார். சரியாக இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் இந்த இளம் பணியாளருக்கு ஓர் அஞ்சலும், நியூயோர்க் செல்லப் போதுமான பணமும் வந்துசேர்ந்தது. என்ன காத்துக்கொண்டிருக்கோ என்ற எண்ணத்தில் புறப்பட்டுச்சென்றார். அன்று அந்த நடுஇரவில் யாருக்குத் தனது அறையைக் கொடுத்தாரோ அதே ஆள் அவருக்காகக் காத்துக் கொண்டு நின்றார். இந்த இளைஞரைப்பற்றி வேறொன்றும் அறியாத முதியவர் இவரை நியூயோர்க் நகரில் 5-வது அவனுயுவில் 34-வது தெருவில் அமைந்திருந்த ஒரு கட்டிடத்திற்கு இட்டுச்சென்றார். ஒரு மிகப் பெரிய, அரண்மனையைப் போன்ற அழகிய கட்டிடம் அது. ''இதுதான் நீர் மேற்பார்க்க உமக்காக நான் எழுப்பியுள்ள கட்டிடம்.'' இளைஞர் கல்லாகச் சமைந்து விட்டார். வியப்பு மின்வெட்டுப்போன்று அவரது உடலை ஊடறுத்துச் சென்றது. ஜார்ஜ் சி. போல்ட் என்ற இளைஞர் திரு. வில்லியம் வால்டார்வ் ஆஸ்டர் கட்டிய விடுதியை மேற்பார்வை இடவேண்டும். ''வால்டார்வ்—ஆஸ்டோரியா'' என்ற பெயர்ப் பலகை தாங்கிய இந்தவிடுதியைவிட அன்று நியூயோர்க்கில் சிறந்த விடுதி வேறொன்றுமில்லை. அந்நியரை அன்புடன் வரவேற்று விருந்தோம்புவோருக்கு இவ்வுலகிலே ஏராளமான நன்மை விளைகின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

**பாரத நாட்டின் பண்பு:**

> ''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்
> தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு.''

துறவறத்தை மேற்கொள்ளாது இல்லற வாழ்வு நடத்துவது விருந்தோம்பும் பொருட்டே என்று விருந்தோம்பலின் தனிப்பெருமையைக் கூறுகின்றார் வள்ளுவர். இல்லற வாழ்வில் நிறைவேற்றவேண்டிய ஐந்து அறங்களில் ஒன்று விருந்தோம்பல் என்று மற்றொரு குறளில் கூறுகின்றார் முதுமொழிப் புலவர். பண்டைக் காலந் தொட்டே தமிழ்ப் பண்பாட்டில் விருந்தோம்பல் ஒரு தனி இடம் பெற்றது என்பதைத் தமிழ் இலக்கியம் பறைசாற்றுகின்றது. பொதுவாகக் கீழ்த்திசை நாடுகள் இந்த நற்பண்பில் தலைசிறந்து விளங்கின. அண்மையில் பம்பாயில் நடந்த நற்கருணை மாநாட்டில் ''பாரதநாடு நற்கருணை நாதருக்கு விருந்தளித்தபோது'' ஏனைய நாட்டினரை வரவேற்றவிதம் மிகப் போற்றுதற்குரியது. பலபார்சி குடும்பத்தினர் தங்கள் வீடுகளை மாநாட்டுக்கு வந்தவர்கள் தங்க விட்டுவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். பாப்பிறையின் பிரதிநிதியாகவந்த கர்தினால் அகாகினியன் ஒரு பார்சி குடும்பத்தின் விருந்தினராக இருந்தார். கிறிஸ்தவ மறையைச் சேராத பல குடும்பங்கள் அவரை விருந்தினராக இன்முகத்துடன் ஏற்றன. பாப்பரசருக்கு பம்பாயில் அளித்த வரவேற்பு அவரது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அவருடைய இதயத்தின் ஒரு பகுதியை இந்தியாவிலே விட்டுச் சென்றுவிட்டார்.

**பண்டை நாகரீகத்தில் விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் பலநாட்டு நாகரீகத்தில் பழங்காலந் தொட்டே ஒரு முக்கிய கூறுபாடாக அமைகின்றது. இந்த உயர் பண்பு கிரேக்க நாகரீகத்தின் ஒரு முக்கிய கூறுபாடாக விளங்கியது. உலகப் புகழ்பெற்ற ஹோமர் இதன் பெருமையைப் பாடல்களில் பாடுகின்றார். பிளேட்டோ என்ற தத்துவ அறிஞர் அந்நியரைப் பற்றிப் பேசும் பொழுது, ''அந்நியருக்கு நண்பர்களோ, உறவினர்களோ இல்லாததால் நமது அன்பிற்கும் இரக்கத்திற்கும் பெரிதும் உரியவர்கள்'' என்று கூறுகின்றார். விருந்தோம்பல் என்றால் எவராயிருந்தாலும்சரி, அவர்களுக்கு உரிய மரியாதை, பாதுகாப்பு அளிப்பது என்று கிரேக்கர்கள் முழுதும் உணர்ந்திருந்தனர். யூதர்களும், முக்கியமாக அரேபியர்களும் அந்நியர்களை அன்புடன் நடத்தினர்.

நகரங்களைவிடக் கிராமங்களில் விருந்தோம்பும் பண்பு சிறந்து விளங்குகின்றது. சில சமயங்களில் முக்கிய ஆட்கள் கிராமத்தின் விருந்தாளிகளாக மாறுகின்றனர். முந்நாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அமெரிக்காவில் பாஸ்டன் நகரிலிருந்து 30கல் தொலைவிலுள்ள கிராமத்திற்கு திரு. எல்ஸ்வொர்த் பங்கரின் விருந்தாளியாகச் சென்றிருந்தார். விருந்தின்போது ஏராளமான உணவுப் பொருட்களைப் பரிமாறினர். இந்திய விருந்தாளிக்குப் பெரும் வியப்பாக இருந்தது. வேலையாள் இல்லாமல் திருமதி பங்கர்மட்டும் இவ்வளவையும் எவ்விதம் தயாரித்திருக்க முடியும்? திருமதி பங்கர் விருந்தாளியின் வியப்பைப் போக்கினார். முக்கிய விருந்தினர் ஒரு வீட்டுக்கு வரும்பொழுது முன்னேற்பாட்டினால், ஒவ்வொரு வீட்டாரும் ஒருவகை உணவுப் பொருள் தயாரித்து அனுப்புவது வழக்கம். அனைவரும் ஒரே குடும்பமாக வாழ்கின்றனர். இப்பழக்கத்தை ''உலகம் சுற்றினேன்'' என்ற நூலில் குறிப்பிடுகின்றார். ஆனால், மேற்கு நாடுகளில் முன்னேற்பாடு இல்லாமல், முன்பின் அறியாத ஓரிடத்திற்குச் சென்றால் கருதுவாரற்றுத் தெருவில் நிற்கவேண்டியதுதான்.

**ஒருமுறை வரும் ஒப்பற்ற விருந்தாளி:**

''செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பவன்'' தனது இல்லம் நோக்கி இதுவரை வராத ஓர் ஒப்பற்ற விருந்தினன் சாவு வரும்பொழுது இன்முகத்துடன் ஏற்பான். ''வீட்டுத் தலைவன் வரும்பொழுது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியரே பாக்கியவான்கள் ....அந்தப்படியே, நீங்களும் ஆயத்தமாயிருங்கள். ஏனென்றால், நீங்கள் நினையாத வேளையில் மனுமகன் வருவாரென்று திருவுளம்பற்றினார்'' (லூக். 12 : 37—40).

**விருந்தினரின் மர்மம்:**

ஹோமர் எழுதிய 'ஆடிசி' என்ற கிரேக்கக் காப்பியத்தில் யூலிஸ்செஸ் என்ற காப்பியத் தலைவன் 20ஆண்டுகள் பலநாடுகளில் அந்நியனாக அலைந்து 'இத்தாக்கா' என்ற தீவிலுள்ள அரண்மனையை பிச்சைக்காரன் கோலத்தில் அடைகிறான். அவனுடைய மனைவியும் மற்றவர்களும் அவனை ஒரு பிச்சைக்காரனாகவே கருதினர். பலசிற்றரசர்களுக்கு அன்று அரண்மனையில ஒரு விருந்து நடந்தது. அவர்களுடைய வீரத்தைக்காட்ட ஒரு போட்டியும் நடந்தது. அந்தப் போட்டியில் கடைசியாகக் கலந்து வெற்றிபெற்ற அந்தப் பிச்சைக்காரன் இத்தாக்கா தீவின் மன்னன்தான் என்று கண்டு எல்லாரும் பேரானந்தம் கொண்டனர். அந்நியரின் வெறும் வெளித்தோற்றத்தின் மறைவில் ஓர் ஆழ்ந்த உண்மை அடங்கி இருக்கின்றது என்பதை இக்கதை விளக்குகின்றது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## உங்களுக்குத் தெரியுமா?

❀ இன்றுவரை திருச்சபையை ஆண்டுவரும் பாப்புமாருள் 229 பேரின் சடலங்கள் ரோமைநகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பான்மையினர் இராயப்பர் பேராலயத்தினுள் இளைப்பாறுகின்றனர். மூன்றுபாப்பரசரின் சடலங்கள் பிரான்சிலும் இருவரின் பூதவுடல்கள் ஜெர்மனியிலும் புதைக்கப்பட்டுள்ளன.

❀ பிரான்சில் உள்ள துறைமுகங்களுள் பூலோன் பிரசித்திபெற்றது. அங்கு கி. பி. 630-ல் அமைக்கப்பட்ட மரியன்னையின் ஆலயம் இன்றும் யாத்திரிகர்களை பெருமளவில் கவர்ந்துவருகிறது. இத்திருத்தலத்தில் தேவதாய் யேசுபாலகனை மடிமேல் அணைத்தவண்ணம் படகொன்றில் அமர்ந்திருக்கும் திருச்சொரூபமே பக்தர்களைப் பெரிதும் ஆட்கொண்டுள்ள அம்சமாகும்.

❀ சப்பாத்துத் தயாரிப்பவர்களின் பரலோக பாதுகாவலர்கள் யார் தெரியுமா? புனிதர்களான கிறிஸ்பின், கிறிஸ்பினியன் என்பவர்களே.

❀ முதலாவது பாப்பரசரான இராயப்பர் ஒன்பது மாதங்களைச் சிறையில் கழித்தார் அல்லவா? அவரது புனிதமான கரங்களையும் பாதங்களையும் பிணைத்துவைத்த இரும்புச்சங்கிலிகளை வின்கோலோ நகரிலுள்ள இராயப்பர் தேவாலயத்தில் பாதுகாத்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம்முதல்தேதியன்று அங்கு நடைபெறும் திருவிழாவின்போது இச்சங்கிலிகள் பொதுஜனங்களின் பார்வைக்கு விடப்படுகின்றன.

❀ மூன்றாவது இன்னோசென் பாப்பு 1198-ல் திருச்சபைத் தலைவராகத் தெரியப்பட்டபோது 37 வயதுடையவராயிருந்தார். இதற்குமுன்னர் இவ்வளவு இளவயதில் யாரும் பாப்புவாகத் தெரியப்படவில்லை.

❀ பாப்பரசர் ஒவ்வொருவருடமும் மரியன்னையின் நாமங்கொண்ட திருத்தலமொன்றுக்குத் தங்கரோஜாவை அனுப்பிவருகிறார். பசும்பொன்னால் செண்டுடன் தயாரிக்கப்பட்ட ரோஜா செடியையே தங்கரோஜாஎன அழைக்கின்றனர். இவ்வருடம் பிறேசில் தேசத்திலுள்ள அபாராஜிதோ நகர திருத்தலம் தங்கரோஜாவைப் பெற்றுள்ளது.

தொகுப்பு: சாமுவேல் பெனடிக்ற்.

## எது முக்கியம்?

### செபமா — செயலா

செபம் மிகமிக முக்கியம் என்பதை இறைவனில் நம்பிக்கைகொண்ட எவரும் மறுக்கமாட்டார்கள். உயிர்வாழ காற்று எவ்வளவு முக்கியமோ, உடல் வாழ உணவு எவ்வளவு அவசியமோ அவ்வாறே ஆன்மா வளரச் செபம் முக்கியம்.

ஆனால் சுவிசேஷம் முழுவதும் பேசு திரும்பத் திரும்பக் கூறும், வற்புறுத்தும், மற்றொன்றும் உண்டு. 'உலகம் எத்திசையும் செல்லுங்கள்', 'சுவிசேஷத்தைப் போதியுங்கள்', 'பசித்திருக்கிறவர்களுக்கு உணவு அளியுங்கள்', 'உடையற்று இருப்பவர்களுக்குஉடை அளியுங்கள்', 'நோயாளிகளைத் தரிசியுங்கள்' என்னும் இவைபோன்றவைகளையும் செய்யுமாறு தெய்வீகபுருஷர் கிறிஸ்து கூறுகிறார். அவர் கூறினால் அது கட்டளை என்றுதானே அர்த்தம். கிறிஸ்து செயலுக்கும் — அப்போஸ்தலிக்கச் செயலுக்கும்—முக்கியத்துவம் கொடுக்கிறார்.



பிற்காலத்தில் 12ஆம் பத்திநாதர் என்று விளங்கிய கர்தினால் பச்செல்லி கூறியதை நாம் கவனத்தில் கொள்வோம். ''நல்லவர்களின் செபத்தினால் மாத்திரம் சமுதாயம் கிறிஸ்து மயமாகும் என்று நாம் நம்பினால் அது பேதமையானது. மனிதனின் வாழ்க்கையில் செபம் மிகமிக முக்கியம். செபிக்கிறவனுக்கே கடவுள் தம் வரப்பிரசாதங்களை அளிக்கிறார். ஆனால் பிரான்சிஸ் சவேரியார் போன்றோரின் செபத்தினால்மாத்திரம் இந்தியாபோன்ற நாடுகள் மதமாற்றம் அடையவில்லை. இப்பெரியார்கள் தம்மையே முழுதும் அர்ப்பணித்து வீரதீரச் செயலைச் செய்தார்கள். வேதசாட்சிகளாக மரித்தார்கள். எனவே இவ்வுலகத்தைக் கிறிஸ்து மயமாக்கவேண்டுமாயின் செபத்தைச் செயலுடன் இணைப்போம்.''

''ஆகவே எல்லாம் கடவுளில் தங்கியிருக்கிறது என்ற விசுவாசத்துடன் செபிப்போம். ஆனால் எல்லாம் நம்மிலேயே தங்கியிருக்கிறது என்ற உறுதியுடன் செயல்புரிவோம்'' உலகத்தைக் கிறிஸ்து மயமாக்குவோம்.

— *Bro. S. A. I. Matthew, S. S. J.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**மகளிர் மன்ற நேயர்கட்கு !... அஞ்சலி !...**

உலகிலே வாழ்ந்த மக்களெல்லாம் தம்மை வருத்திய பலவகைப்பட்ட துன்பதுரிதங்களைப் பொறுக்கமாட்டாமல் ஒருமுறை கடவுளை நோக்கிக் கண்ணீர் வடித்தார்களாம். அதுமட்டுமல்ல, இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல ஒவ்வொருவனும் தான்தான் உலகிலேயே பெருந்துன்பம் அனுபவிப் பதாகவும், தனது அயலாரது துன்பங்கள் எவ்விதத்திலோ சிறிய துன்பங்க ளாகவே இருப்பதாகவும், கடவுள் தமக்குமட்டும் அநீதி செய்வதாகவும் முணு முணுத்துக் கொண்டார்கள். நன்றிகெட்ட மனுக்குலத்திற்கு நற்படிப்பினை யூட்டச் சித்தமானார் இறைவன். எனவே, அவர், அவர்கட்குத் தரிசனை யாகி, "உங்களுக்குப் பெரும்பாரமாகத் தோன்றுகின்ற கஷ்டம் எதுவோ அதைக் கொண்டுவந்து இதோ நாம் காண்பிக்கும் சமவெளிப் பிரதேசத் தில் வீசுங்கள். அப்புறம் உங்கட்கு இலகுவாகத் தோன்றும் ஒரு துன்பத் தை நீங்களே தெரிந்துகொள்ளலாகும்" என்றார். மக்களின் மகிழ்ச்சியோ அளவுகடந்ததாகிவிட்டது. சந்தோஷ ஆரவாரத்துடனே தொடங்கினர் தம் பணியை. ஒருவன் தன்னைப் பீடித்திருந்த காசநோயைக் கொண்டுவந்து போட்டான். மற்றொருவன் தனது குருடான கண்ணை வீசி எறிந்தான். இன்னொருவன் தனது வறுமையை வாரிவந்து கொட்டினான். பெண்ணொருத்தி தனது முகத்தின் அவலட்சணத்தை வீசிஎறிந்தாள். வாலிபனொருவன் தன் கல்லூரிப் புத்தகங்களை எறிந்தான். மற்றொருவன் தன் மனைவியையே தூக்கிவந்து போட்டான். சதா வீட்டில் நச்சரித்துக் கொண்டிருக்கும் அவள் அவனுக்குப் பெரும் பாரச்சுமையாகி விட்டாள். இவ்விதம் எல்லோரும் தம் பணியை ஆற்றியதும் துன்பமலை வானளாவி நின்றது. இப்பொழுது அவர்கட்கு இலகுவாகத் தோன்றும் துன்பங்களை எடுத்துப்போக இறைவன் பணித்தார்.

எல்லோரும் தமக்கு இலகுவாகத் தோன்றியதும் அயலவர் பெருங் கஷ்டமென எறிந்ததுமான துன்பங்களை மகிழ்ச்சியுடன் தூக்கிக்கொண்டு வீடு சென்றனர். மாதம் ஒன்று ஓடவில்லை. திரும்பவும் மனுக்குலம் முணு முணுத்தது. தாம் முன் அனுபவித்த கஷ்டமே தற்போதைய கஷ்டத்திலும் இலகுவானதென்றும் அவற்றையே திரும்பவும் தரும்படியும் இறைவனை நோக்கி இறைஞ்சியது. திரும்பவும் துன்பமலை ஆக்கப்பட்டது. அவரவர் தாம் முன்னெறிந்துவிட்டுப்போன துன்பங்களையே திரும்பவும் மனமகிழ்ச்சி யுடன் தம்முடன் கொண்டு சென்றனர். நேயர்களே !... நம்மால் சுமக்க முடியாத ஒரு சிலுவையை இறைவன் நமக்கு அளிக்கமாட்டார். எனவே அவர் எமக்குத்தரும் துன்ப துரிதங்களை நல்மனதுடன் முறையீடின்றிக் கையேற்று புண்ணியபலன்களைச் சேகரிப்போமாக !......

—ரோஜா

# பலாப்பழம் பலே ஜோர் அக்கா!....

(ஊர்க்குருவியின் செய்திச்சுருள்)

கீச் !... கீச் !... கீச் !...

அப்படித்தான் குரல் கொடுத்தேன் ! பகற்றூக்கம் போட்டுக்கொண்டிருந்த மகளிர்மன்ற அக்கா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள். வா !...வா !... என்று வரவேற்றவள் என்ன !... உன் மூஞ்சி அவ்வளவு நல்லாக்காணலையே ! ... ஒன்னரை முழ நீளத்திலே நீண்டு போய்விட்டதே !... என்ன நடந்தது ? சொல்லேன் !... என்று விசாரித்தாள். "ஒன்றுமில்லே அக்கா ! எல்லோரும் 'பேர்த்டே' கொண்டாடுறாங்களே. நமக்குமட்டும் அப்படி ஒண்ணுமில்லை யா ?... ஒரு பேர்த்டே பார்ட்டி... ஒரு லஞ்ச்,... ஒரு டின்னர் அப்படி ஒண்ணு வைக்கணும் போலே இருக் கே !..." என்றேனு !... "அடிசக்கை ! ... உனக்கும் அந்தப் பைத்தியமா !... சரி !... பாரு!... இன்னிக்கு புரட்டாதி எட்டாந்தேதியில்லே. மாதாவுடைய பிறந்த நாளாச்சே !... நீ எப்போ பிறந் தாயோ யார் கண்டார்கள் ?... இன் னிக்கே உன்னுடைய பேர்த்டேயை யும் வைச்சுக்கொள்வோமே." இதோ ஒரு திடீர் விருந்து ! வா !... தோட் டத்துள் போவோம் ! என்று அழைச் சிட்டுபோனாள். "சேர்ப் சேர்ப் !..." என்று குரல் கொடுத்தாள். சுமார் 50 பச்சைக்கிளிகள், எட்டுமைனாக்கள், மூணு நாலு கரிக்குருவிகள், ஏழெட்டு அணிற்குஞ்சுகள் அத்தனையும் வந்து விட்டன அந்தத் தென்னந்தோப்பில். அதோ விருந்து ! என்று காட்டினாள் பலாமரமொன்றின் உச்சியை. கனிந்த பலாப்பழமொன்று நமக்காகக் காத் திருந்தது. அடுத்தகணம் விருந்தை ஒரு கைபார்த்தோம். விருந்து முடிந் ததும் "இப்போ நியூஸை அவிழ்க்க மறந் திடாதே !..." என்றாள், சரி அக்கா ! என்று அங்கேயே அமர்ந்துவிட்டோம் இருவரும்.

"கடந்த வாரம் தீவுப்பகுதியை நோக்கிச் சனத்திரள் சரிந்துகொண் டிருந்தது. என்னமோ என்று கூட் டத்தோடு கோவிந்தா வாகச் சென் றேன் நானும். ஊர்காவற்றுறை, கரம் பொன் பதியெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. "சற்பிரசாத சமாக மம்" என்று யாரோ முணுமுணுத் தது காதில் விழுந்தது. நல்ல தருணத் தில் போய்ச்சேர்ந்தேனு !... சற்பிர சாத மகாசுற்றுப்பிரகாரம் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. வெற்றிலை போன்று அமைக்கப்பட்ட அழகான ரதத்தின் மேடை, மத்தியிலே குத்து விளக்கின் மேல் கதிர்ப்பாத்திரத்தில் சற்பிரசாதநாதர் எழுந்தருளி வந்தார். ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் அழகான திருக்குடைபிடித்துப் பக் கத்தே முழந்தாட்படியிட்டிருந்தார். ஏராளமான குரவர், கன்னிகைகள், பெண்மணிகள், ஆடவர் சிறுவர், சிறு மியர் அழகாக ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்தனர். இன்னிசைக் கீதங் களில் பாமாலை சாற்றினர் இறைவ னுக்கு. 'காணக் கண்கோடி வேண் டாமா !...' என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். சமாகமத்தின் முக்கிய பொறுப்பாளரான ஊர்காவற் றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர்க்கு இட்டடைச்சிலாம் போட் டேனு !... பறந்தேன் விண்ணில் ! கீச் !...

ஆமா !... அடுத்து யாழ்நகர் மண் ணில் குதித்தேன். அங்கேயுள்ள பங் குக் கோவிலொன்றில் தோரணங்கள் அசைந்தாடிக்கொண்டிருந்தன. எட் டிப்பார்த்தேன். அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா அவர்கள் காரிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தார், கட்டளைச் சுவாமியார் மாலையும் கழுத் துமாக ஓடித்திரிந்தார். ஏதடா !... என்று தலையை நீட்டினேன். பாலர் களரித் திறப்புவிழா...ஒன்று நடை பெற்றுக்கொண்டிருந்தது. பாடசாலைப் பருவத்துக்கு முந்திய பருவத்திலே சிறார்க்குக் கல்வியின் அவசியத்தை உணர்ந்துகொண்ட குரவர் அவர்களது அயராமுயற்சின் பலன் இது. அக் கோவிற்பற்றின் மாதர்கழக அங்கத்த வர்கள் பக்கபலமாகக் கைகொடுத்தார் களாம். குரவர்களும், கிறிஸ்தவர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால் எத்தனை அருந்தொண்டுகளை, சாதனைகளை நிலை

[தொடர்ச்சி 6ஆம் பக்கம்]

# கடைத் தெருவில் பெண்கள்....!

கடைத்தெருவில் பெண்களைக் காண் பதா ! ... ஐயையோ ! ... வீட்டு முற் றத்தையே மிதிக்கவிடமாட்டோமே ! ... என்பனபோன்ற பண்டைய பழக்க வழக்கங்களெல்லாம் எப்போதோ மலை யேறிவிட்டது. இன்றோ ! ... பெண் கள்தான் கடைத்தெருவையே ஆட்சி செய்கின்றார்கள் என்று கூறினால்கூட பாதகமில்லை. இன்றைய நாகரிக உல கில் இல்லத்தரசிகளே கடைத்தெரு வுக்குச் சென்று தமக்கும் தம் இல் லத்தவர்கட்கும் வேண்டிய துணிமணி களையோ, இல்லத்தை அலங்கரிக்கும் தளபாடங்களையோ சமையலுக்கு வேண்டிய பொருட்களையோ தெரிந்து வாங்கிக்கொள்வது சகஜமாகிவிட்டது மட்டுமல்ல, வேண்டியதுங்கூட. அது மட்டுமா ; ஆண் உலகமே விட்டது தொல்லை ! ... என்று நிம்மதியாக கை கழுவிவிட்டு இப்பெரும் பொறுப்பைப் பெண்கள் தலையிலே கட்டியும் விடுகி றார்கள். ஏன் தெரியுமா ! ... பணத் தைக்கொட்டி வாங்கவேண்டியிருப்ப துடன், "அதுசரியில்லை, இதற்கு அதி கம்பணத்தைக் கொட்டிவிட்டீர்களே !" என்றெல்லாம் இல்லத்தரசிகளின் முறு முறுப்பையும் வாங்கிக் கட்டிக்கொள் ளாமல் தப்பிவிடலாமல்லவா ! ... அப் படியிருப்பினும் எம்மிடம் ஒப்படைக் கப்பட்ட பெரும்பொறுப்பை பெண் ணுக்குரிய மரியாதையுடன், சிக்கன ரீதியில் நமக்கும் அலுப்பேற்படாரீதி யிலே செய்து முடிக்கவேண்டுமா ? ... இதோ பின்வரும் குறிப்புகளைக் கவ னித்து அனுசரணைக்குக் கொண்டு வாருங்கள் :—

1. கடைத்தெருவுக்குப் புறப்பட முன் வாங்கவேண்டிய பொருட்களின் பட்டியல் முதலில் தயார்செய்து கொ ள்ளவேண்டும். இதையும் மளிகைச் சாமான்கள், துணிமணிகள், தளபாடப் பொருட்கள், என்ற பிரிவுகட்கேற்பப் பிரித்து எழுதிக்கொள்ளவேண்டும். கடைக்குப் புறப்பட்டுக்கொண்டுதான் எழுதுவதல்ல. முதல்முறை கடைத் தெருவிலிருந்து யாம்திரும்பியதிலிருந் து எப்பொருள் தட்டுப்பாடு ஆகிறதோ, அல்லது இன்ன இன்னபொருள் தே வை என்று நினைவுக்கு வருகிறதோ உடனுக்குடனே குறித்துவைத்துக் கொள்வது நல்லது. இப்படிச் செய்வ தால் கடைத்தெருவில் எதையாவது மறந்துபோய் விட்டுவிட்டு வந்து பின் னர் அவதியுறும்கஷ்டத்தைத் தவிர்க்க லாம்.

2. நாம் பட்டியலைத் தயார்செய்த தும், ஏறக்குறைய எவ்வளவு பணம் தேவைப்படக்கூடும் என்று கணக்கிட் டுக்கொண்டு அதற்குமேலாகவும் ஒரு ஐந்து, பத்து ரூபாகூட எடுத்துவைத் துக்கொண்டு புறப்படவேண்டியது. இப்படிச்செய்தால் அதிக பணத்தைக் கொண்டுபோய்க் கடைத்தெருவில் தொலைத்துவிடுவதும், பொருட்களை வாங்கிவிட்டுப் பணத்தை எடுத்துவா வில்லையே என்று அவலப்படுவதுமான திண்டாட்டங்கள் ஏற்பட இடமிராது.

3. கடைத்தெருவுக்குப் பொருட் கள் வாங்கப் புறப்படும்போது குழந் தைகள், சிறுவர் சிறுமியரை அழைத் துப்போகும் பழக்கம் அறவேகூடாது. இதனால் குழந்தைகளைத் தூக்கிவைத் துக் கொள்ளவேண்டியிருப்பது, சிறு வர் சிறுமியர் கடைத்தெருவில் கா ணும் பொருளையெல்லாம் பெற்றுவிட அலட்டுவது, சொற்ப நேரத்தில் அவர் களைத் துப்போக வேலையை முடிக் காமல் வீடுதிரும்பவேண்டியிருப்பது போன்ற கஷ்டங்களைத் தவிர்த்துவிட லாம். பொருட்களைத் தூக்கிவருவதி உதவியாக இருக்கக்கூடிய வேலையாட் களையோ, வளர்ந்த பிள்ளைகளையோ கூட்டிச்செல்லலாம்.

4. கடைத்தெருவில் பல கடைக ளில் ஏறி இறங்காமல் கூடியளவு ஒரு கடையிலேயே துணிமணிகளைப் பெற் றுக்கொள்வது, சந்தையிலே ஒரு வியா பாரியிடமே காய்கறிகளைப் பேரம்பே சிப் பெற்றுக்கொள்வது மிகநன்று. இதனால் அலைந்துதிரியும் அலுப்பைத் தீர்ப்பதுடன் மற்றவர்களது கேலிகட் கும் ஆளாகாமல் பெண்களின் பெரு மையைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

5. துணிமணிக்கடைகளில் எல் லாச் சேலைகளையும் இழுத்துமேசையில் போடச் செய்துவிட்டு, ஈற்றில் ஒன் றையும் வாங்காமல், "எமக்குப் பிடிக்க வில்லை என்று முகத்திலடித்துவிட்டது போல் சொல்லிவிட்டுப் படியிறங்கிப் போவது பெண்களுக்கு அழகல்ல. கண்ணாடி அலுமாரிகளில் இருப்பவற் றை நாமே பார்வையிட்டு வேண்டிய வற்றைமட்டும் எடுப்பித்துப் பார்ப்பது நன்று. வாங்க நினைக்காத பொருட் களுக்குப் பேரம்பேசிக்கொண்டு நிற்ப தும் பெண்களுக்கு ஏற்றதல்ல.

6. காய்கறிக்கடைகளிலும் நல்ல வற்றை, வேண்டிய அளவில் குறிப் பிட்ட நாட்களுக்குப் பாதுகாக்கக் கூடியனவாக வாங்கவேண்டும். பழங் களை அரைவாசி கனிந்தபதத்தில் வாங் கினால் சில நாட்களுக்கு அவை பழுக் கப் பழுக்கப் பாவிக்கலாம், முற்றும் கனிந்தவற்றை வாங்கினால் விரைவில் அழுகிப்போகும். காய்கறிகளையும் இப் படியே ஆராய்ந்து பார்த்துப் பெற வேண்டும்.

7. காலணிக்கடைக்குப் போவதா னால் எப்போதும் சரியான அளவைக் கொண்டுபோகவேண்டியது அல்லது அவற்றைப்போட்டு நடந்துபார்த்துச் சரியாக இருக்கிறதா எனத் திருப்தி செய்துகொண்டே கடையைவிட்டுப் புறப்படவேண்டும். இன்று எத்தனை யோ பெண்கள் இவ்விஷயத்தை முத லில்கவனிக்காமல் செருப்புகளையும் சப் பாத்துக்களையும் தூக்கிக்கொண்டு திரும்பத் திரும்பக் கடையை முற்று கையிட வேண்டியிருப்பதைக் காண் கின்றோமே.

8. ஒவ்வொரு கடையிலும் விலைச் சீட்டைப் பெற்றதும் கூட்டிப்பார்த்து, கொடுத்தகாசு, மிகுதியாகப் பெற்ற காசு முதலியவற்றைச் சரிசெய்து கொள்ளவேண்டும். காசுக்கணக்குப் பிசகினால் வீணாகக் கடைத்தெருவில் சண்டையை விலைக்குவாங்கவேண்டிய தில்லை.

9. ஒவ்வொரு கடைக்கும்போய்த் திரும்புகையில் கையில்கொண்டுபோன பார்சல், அக்கடையில் வாங்கிய பொ ருட்பாசல், நாம் கையில்கொண்டுசெல் லும்குடை, பர்ஸ் என்பன நம்மிடம் இருக்கிறதா எனப் பார்வையிடல் அவ சியம். கடைத்தெரு ஆடம்பரங்களில் கவனத்தைச் செலுத்திப் பின்னர் கைப்பொருளை இழக்கும் கஷ்டம் நமக்கு வேண்டாமே.

மேலே காட்டிய ஒருசில முக்கிய அம்சங்களை நாம் கவனித்துக்கொண் டோமானால் நமது கடைத்தெரு முற் றுகையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு வீடு திரும்பலாமல்லவா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி சற்பிரசாத சமாகமம்

தீவுப் பகுதியின் சரித்திரத்திலே பொன்னெழுத்துகளால் பொறிக்கப் படக்கூடிய ஒரு நிகழ்ச்சி. அகில இலங்கைக்கும் அதிர்ச்சியூட்டிய அரிய சம்பவம், மக்கள் மனதை இறைவன் பக்கம் அருட்டி எழுப்பிய எழில்மிகு மகோற்சவம், அதுவே கடந்த 14-9-1968 சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திலே நடந்தேறிய சற்பிரசாத சமாகமம்.

மிகவும் ஆடம்பர பத்திச் சிறப்பாக மன அருட்சிக்கும் மகிழ்ச்சிக்கும் கவர்ச்சிக்கும் உரியவிதமாக இச்சமாகமம் நடந்தேறியது.

சற்பிரசாத சமாகமத்துக்கு ஆயத்தமாக ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, சுருவில், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு முதலாம் இடங்களில் மூன்று நாட்களாகக் குருமார் ஞானஒடுக்கங்களை நடத்தினர். இந்த மூன்று நாட்களிலும் மேற்குறிக்கப்பட்ட இடங்களிலுள்ள கத்தோலிக்கவாலிபர்கள் புனித அந்தோனியார் கல்லூரியிலும், இளம் பெண்கள் ஊர்காவற்றுறை, கரம்பொன் கன்னியர் மடங்களிலும் ஒருங்குகூடினர். இவர்களுக்கெனத் தனிப்பட்ட முறையில் புத்திமதிகள் நிகழ்த்தப்பட்டன. வாலிபர்கள், கன்னியர்களை எதிர்நோக்கியுள்ள தற்காலப் பிரச்சினைகளைப்பற்றியும் எதிர்காலத்தைப்பற்றியும் நன்கு ஆராயப்பட்டன. திருச்சபையாகிய இறைவனின் திராட்சைத் தோட்டத்திலே திருத்தொண்டு புரிவதற்குவேண்டிய திருத்தொண்டர்கள் தொகை பெருகவேண்டியதன் அவசியத்தையும் தங்கள் தங்கள் துறவற சபைகளின் கொள்கைகளையும், நோக்கங்களையும், நடைமுறைகளையும், வாலிபர்களும் கன்னியர்களும் அவற்றில் சேர்ந்து திருத்தொண்டு புரிவதால் அடையக்கூடிய இகபர ஆன்மலாபங்களையும், குருமாரும் சங். கன்னியர்களும் விரிவாக எடுத்துரைத்தனர்.

ஆயத்த தினங்களாகிய மூன்று நாட்களும் அமைதியுடன் கழிந்தன. எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 14-ந் திகதி சனிக்கிழமை வந்தது. ஆதவனைக்கண்ட தாமரை மலர்கள் போல மக்கள் மனம் மலர்ந்தது. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிமைதானத்திலே அழகுற அமைக்கப்பெற்றஉயர்பீடத்திலே திருமலைத்துணை மேற்றிராணியார் மகாவந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை அடிகளால் குருமார் பலர் துணைசெய்ய கூட்டுப்பூசைப்பலி நிறைவேற்றப்பட்டது. தீவுப்பகுதியின் பல இடங்களிலும் இருந்துவந்த இருநூற்றுக்கதிகமான சிறுவர் சிறுமியர் முதன் நன்மை பெற்றனர். இன்னிசைக் கீதங்கள் வானை எட்டின. பூசைப்பலியின் மகத்துவம்பற்றி மகாவந். மேற்றிராணியாரால் அரியபிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. யாவரும் பலிஒப்புக்கொடுத்துப் பத்துமணியளவில் வீடுதிரும்பினர்.

அன்று பிற்பகல் 4-30 மணியளவில் தீவுப்பகுதிகள், யாழ்ப்பாணம், இளவாலை, சில்லாலை, பண்டைத்தரிப்பு, மாதகல் முதலாம் இடங்களிலிருந்து பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சமுத்திரம்போல் கல்லூரிமைதானத்தில மகா சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொள்ள ஆயத்தமாக நின்றனர். சுற்றுப்பிரகாரம் ஆரம்பமானது; ஆலய மணிகள் ஒலிக்க, வெடிகள் அதிர, வர்ணக்கொடிகள் பறக்க, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற அழகிய வீதிகள்வழியாகப் பாடசாலைச் சிறுவர், சிறுமியர், பெண்கள், கன்னியாஸ்திரிமார், குருமார், ஆண்கள் வரிசையாகச் செல்ல, ஒலிபரப்பியில் ஆர்ப்பரிப்புகள் சொல்ல, இனிய கீதங்கள் காற்றில் மிதக்க, அழகுற அமைக்கப் பெற்ற இரதத்தில் சற்பிரசாதநாதர் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டார். சுமார் மூன்றுமைல் தூர ஊர்வலத்தின்பின் சுற்றுப்பிரகாரம் 7 மணியளவில் கல்லூரிமைதானத்தை அடைந்தது. சற்பிரசாதநாதரை உயர்பீடத்தில் எழுந்தருளவைத்ததும், கண்டியிலிருந்து வந்த வண. செல்வராசா சுவாமியார் அவர்கள் ஓர் இனிய பிரசங்கம் செய்தார். அதன்பின் மேற்றிராணி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருக்குடும்பத்தின் அளவற்ற அன்பினாலும், திருஇருதய ஆண்டவரின் அனுக்கிரகத்தாலும், பரி. சதாசகாய மாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயுஇவர்களின் மன்றாட்டினாலும் எனது மனைவிக்கு ஏற்பட்ட ஆபத்தான நோய் குணமடைந்து வருகிறது. மேலும் பூரண சுகமடையவும், எனது குடும்பத்தாருக்கு வேண்டிய ஆத்தும சரீரசகாயங்களை இவர்கள்மூலம் இரந்துகேட்டு நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

ஓர் அடியான்.

புதுமாத்தலன் 157-68

---

கு. மேரி மாகிறேற் ஞானம்மா

அவர்கள் மறைவின்

### முதல்வருட நினைவு

தோற்றம் : 6—8—1904 மறைவு : 5—10—1968

"சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

மண்ணுலகை விட்டுப்பிரிந்தும், எங்கள் மனக்கண்ணில் நின்றுநீங்காத கு. மேரி மாகிறேற் ஞானம்மா அவர்கள் மறைந்த முதலாவதுஆண்டு நிறைவு 5-10-68இல் வருவதால், அன்று அவரது ஆன்மஇளைப் பாற்றிக்காக இனசனர், நண்பர்கள், அனுதாபிகள் யாவரும் விசேடவிதமாகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும் :

கணவர், ப. குருசமுத்து (இராசையா)

சகோதரன், எஸ். ஏ. டோமினிக்.

சகோதரி, திருமதி எம். வி. ஆசிர்வாதம்

யாழ்ப்பாணம் 154-68

---

திரு. சந்தியா சேபமாலை பீரிஸ்

அவர்களின்

### முதல் வருட நினைவு

தோற்றம் : 2—7—85. மறைவு : 24—9—67.

"உனக்காகச் சிலுவையில் அறையுண்ட யேசுநாதர், உன்னை வேதனையினின்று விடுவிப்பாராக"

ஆண்டவரே! நித்தியஇளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும். முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக!

எங்கள் அருமைத் தந்தை கர்த்தரில் நித்திரை அடைந்து 1968 புரட்டாதி 24ஆம் நாளோடு ஓராண்டு முடிவடைகின்றது. புரட்டாதி 27ஆம்தேதி மாலை 6-30மணிக்கு தாழ்வுபாடு, புனித சூசையப்பர் ஆலயத்தில் அவரது ஆன்மஇளைப் பாற்றிக்காகத் திக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். ஆகவே அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்கும்படி அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும் மக்கள் :

யக்கோவாள் பீரிஸ், சில்வெஸ்றர் பீரிஸ், அருளப்பு பீரிஸ், சூசையம்மா பீரிஸ், ஞானானந்தம் பீரிஸ், மரியதாசன் பீரிஸ்.

தாழ்வுபாடு, மன்னார். 153-68

---

# அந்த அந்நியர்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிரகாம் அப்பொழுது 90வயதுக் கிழவர். ஒரு நாள் நடுப்பகல்நேரம். கூடாரத்தின் வாயிலில் சுருங்கிய கன்னங்களை உள்ளங்கையில் பதித்துப் பலத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். திடீரென, அவருடைய சிந்தனைச் சூழல் சிதறுண்டது. அவருடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்தபொழுது அவர்முன் அந்நியர் மூவர் நின்றதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தார். உடனே அவர்களுடைய பாதங்களைப் பணிவுடன் கழுவி, அவர்களுக்குப் பெரும் விருந்தளித்து, பால் வார்த்து அவர்களை வழிஅனுப்பினர். இந்த மூவரில் ஒருவர் அபிரகாமின் கிழட்டு மனைவி சாராவுக்கு ஒரு மகவு பிறக்கும் என்பதைக்கூறியவுடன் கூடாரத்தினுள் நின்றுகொண்டிருந்த சாரா கலகலவெனச் சிரித்துவிட்டாள். இந்த மூவரும் வானதூதர் என்று பின்புதான் அபிரகாமுக்குத் தெரியவந்தது (ஆதியா. 18). இதைக் குறித்துத்தான் "அந்நியரை விருந்துபேண மறவாதிருங்கள்; அதனாலே சிலர் தங்களை அறியாமலே தேவதூதர்களை விருந்தோம்பியதுண்டு" (எபிரே. 13 : 2) என்று புனித சின்னப்பர் எபிரேயருக்கு எழுதினர்.

அன்று யெருசலேம் நகர் ஒரு பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. அன்றைய நிகழ்ச்சியைப்பற்றி மக்கள் கூடிக்கூடிப் பேசினர். இந்நகரில் இருந்தால் ஆபத்து நேரிடலாம் என்று எண்ணி இருவர் தம் சொந்தஊராகிய எம்மாவுஸ்க்குச் சென்றுகொண்டிருந்தனர். இடையில் ஒரு வழிப்போக்கரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார். சுவையான உரையாடலில் பயணக் களைப்பே இல்லை. ஊரை அடைந்தபொழுது இருட்டிவிட்டது. அந்த அந்நியர் இன்னும் அப்பால் உள்ள ஓர் ஊருக்குச் செல்வதாகத் தெரிந்தது. அதனால் இருவரும் அவரை வற்புறுத்தி அவர்களுடன் இரவைக் கழிக்க வேண்டினர். இரவு உணவு நேரத்தில் அவர் அப்பத்தைப் பிட்டபொழுது அவர் கிறிஸ்துதான் எனக் கண்டுகொண்டனர். வியப்பிலிருந்து விடுபடுவதற்குள் மறைந்துவிட்டார்.

இவற்றிலிருந்து முன்பின் அறியாத ஒருவரை அன்புடன் ஏற்கும்பொழுது அவர்களது வெளித் தோற்றத்தடியில் ஓர் உயர் உண்மையும் மறைந்துள்ளது என்பதை அறியலாம்.

### நான்தான் அந்த அந்நியன் :

4-ஆம் நூற்றாண்டின் மார்டின் என்ற உரோம சிப்பாய் வழியில் கந்தல் உடையணிந்த ஓர் ஏழை குளிரில் நடுங்குவதைக்கண்டு மனமிரங்கினான். 20 வயது இளைஞன் மார்டின் தனது உடையின் பாதியை வெட்டி ஏழைக்கு அளித்துச் சென்றான். அன்றிரவு நமதாண்டவர் மார்டின் ஏழைக்கு அளித்த உடையில் தோன்றினார். கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம் அந்நியர் யாரென்று தெரியும். நாம் அன்புடன் வரவேற்கும் அந்நியர் கிறிஸ்துதான்என்று அவரே தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார். இறுதித் தீர்வை நாளில் நல்லவர்களைப்பார்த்து, "நான் பசியாயிருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், எனக்குத் தண்ணீர் கொடுத்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், எனக்கு உறைவிடம் கொடுத்தீர்கள்... என்னுடைய மிகவும் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்குநீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச் செய்தீர்கள்என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கின்றேன்" (மத். 25 : 35—40). ஒவ்வொரு விருந்தினரிலும், ஒவ்வோர் அந்நியரிலும் கிறிஸ்துவையே ஏற்கின்றோம். மற்றவர்களைக் கருதாது, 'கடவுளை நேசிக்கின்றேன்'என்று கூறுபவனை நம்பவேண்டாம்என்று ஒருவர் கூறுகின்றார்.

விருந்தோம்பலில் ஒரு வியப்புக்குரிய காரியம் நடைபெறுகின்றது. விருந்தாளியைவிட விருந்தளிப்பவர் கிறிஸ்துவையே ஈடாகப் பெறுகின்றார். கிறிஸ்து மற்றவர்களில் நம் விருந்தினராக இருப்பதுடன், அவரே விருந்தளிப்போருக்கு விருந்தளிப்பவராகவும் இருக்கின்றார். ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் பசியமர்த்துகின்றார். அதுமட்டுமல்ல, அவரையே விருந்தளிப்போரின் உணவாகவும், பானமாகவும், அளிக்கின்றார். "யேசுநாதர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்துப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து: இதை உட்கொள்ளுங்கள்; இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது என்றார்" (மாற்கு 14 : 22). இறைவன் தம் விண்ணக வீட்டுக்கு மனிதர்களை வரவேற்கும்பொழுது ஒரு விருந்தளிப்பவராகவே இருக்கின்றார்.

நம்முடைய குடும்பங்களில் முன்பின் தெரியாதவரையும் மற்றவர்களையும் அன்புடன் வரவேற்றுப் பேணும்பொழுது கிறிஸ்துவையே பேணுகின்றோம். அவசரமாகச் செல்லும்பொழுது வழிமறித்துத் தகவல் கேட்போரும், வீட்டுவாயிலில் தொண்டைகிழிய கத்திச் சினமூட்டும் பிச்சைக்காரனும், தெருக்கோடியிலே தேடுவாரற்று ஒதுக்கப்பட்ட முடவனும், இரயிலிலே நெருக்கி இடித்து எரிந்துவிழுவோரும் கிறிஸ்துதான் என்பதனால அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். நாம் ஒருநாள் கிறிஸ்துவின் விருந்தாளிகளாக இருப்போம். மற்றவர்களை நாம் ஏற்காதபொழுது கிறிஸ்து ஓர் அந்நியராகவே இருக்கின்றார். "அவருடையவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (அரு. 1 : 11). மற்றவர்களை ஏற்காவிடில் இறுதியில் கிறிஸ்துவினுடைய உலகில் நாமும் அந்நியர்களாகத்தான் இருப்போம். நண்பர், உறவினர் இன்றி அவதியுறுவோம். அப்பொழுது தேடுவாரற்று வாழ்வதென்றால் எவ்வளவு கேடானதில்லை என்பதை நெஞ்சத்தைப் பிளக்கும் விதத்தில் உணர்வோம். அப்பொழுது, "பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள்" என்ற வார்த்தை ஒரு பகுதியினருக்கு இன்பத்தை அளிக்கும். நம்மை நாடிவருவோருக்கு முதற்கண் நம் வீட்டுக் கதவுகளைத் திறந்துவிடாவிடில், இறைவனுடைய வீட்டில் விருந்தினராக எப்படி நுழையமுடியும்?

—ஞானம்

—(யேசுநாதருடைய திருஇருதயத் தூதன்)

---

அந்தோனி இம்மானுவேல் பர்னாந்து

அவர்கள்

அமரத்துவமடைந்த

### 3-ம் வருட ஞாபகம்

பிறப்பு : 29—11—1902. இறப்பு : 1—10—1965.

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்"

இவரது ஆன்மசாந்திக்காக மன்னார், அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் 1-10-68 செவ்வாய்க்கிழமைகாலை ஒருதிக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். முடிவில்லாப் பேரொளி இவர்மீது ஒளிர்வதாக.

பத்தாவை இழந்து துயருறும் மனைவி:

மேரி மார்த்தம்மாள் பெர்னாண்டோ

மக்கள் : அனற்று பெர்னாண்டோ, பமிலா பெர்னாண்டோ.

சின்னக்கடை, மன்னார். 146-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## மருதமடுத் திருயாத்திரை

மருதமடுத் திருப்பதியிலே வருகிற மாதம் கொண்டாடப்படவிருக்கும் செபமாலைமாதாவின் திருநாளுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டுப் புகையிரதப்பகுதி விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்திருக்கிறது. இம்மாதம் 30ஆம்திகதி முதல் அடுத்தமாதம் 8ஆம்திகதிவரை மடுரோட்டுப் புகையிரத நிலையத்திற்கும், மடுத்திருப்பதிக்குமிடையில் றெயில்-றோட் இணைப்புச்சேவையை வழமைபோல் நடத்தவிருக்கிறது.

## வயிற்றோட்டமும் குழந்தைகளும்

யாழ்ப்பாணத்திலே கிராமப்புறங்களில் குழந்தைகள்மத்தியிலே விரைவாகப் பரந்துவரும் வயிற்றோட்டம் கண்டவைகளாய்ச் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலைமட்டும் 42குழந்தைகள் யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டன. இவைகளில் 5 குழந்தைகள் அன்றே இறந்துவிட்டன. ஏற்கனவே இந்தநோயால 19குழந்தைகள் இறந்துள்ளன. இந்தக் குழந்தைகளின்மலம் கொழும்பிலே பரிசோதனை செய்யப்பட்டுத் தொற்றுநோய் அல்லவென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது இந்தக்குழந்தை நோயாளிகளுக்குத்தனிவாட்டொன்றில்சிகிச்சையளிக்கப் படுகிறது. குழந்தைவைத்திய நிபுணர்கள்இருவரும, ஐந்துடக்டர்மாரும் தற்போது அங்குள்ள 42 குழந்தைகளுக்கும் சிகிச்சையளித்து வருகிறார்கள்.

## பனம்பழமும் அன்னாசிப்பழமும்

வடபகுதிப் பனம்பழத்திலே இலங்கையின் தென்பகுதியில பெரும்தேவையும், விருப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அப்பகுதியிலிருந்து அன்னாசிப்பழங்களை லொறிகளில் கொண்டுவரும் வியாபாரிகள் அவைகளை இங்கே விற்றுவிட்டுத் திரும்பும்போது இங்குள்ள பனம்பழங்களை ஏற்றிச்செல்லுகின்றார்கள். அங்கே பனம்பழம்ஒன்று 50சதமாக விற்கப்படுகிறதாம்.

## மிதக்கும் துறைமுகம்

2-வது உலகயுத்தத்தின்போது திருகோணமலையிலே ஜப்பானிய விமானங்கள்வீசிய குண்டுத்தாக்குதல் காரணமாகக் கடலில்ஆழ்ந்த மிதக்கும் துறைமுகம் பிரான்சிய அரசாங்கத்தின் உதவியோடு கடைசியாக மிதத்தப்பட்டுவிட்டது. 1,000 அடிநீளமும், 175 அடி அகலமுமான இந்தச் செயற்கைத் துறைமுகத்தை வெளியேற்றுமாறு இதற்குமுன் பலதடவை முயன்றும் பலனளிக்கவில்லை, இப்போது 43ஆம் முறையாக நடைபெற்ற முயற்சியே வெற்றியளிக்கலாயிற்று.

## மாணவரின் கல்வி நிலை

"அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றபின் பழைய நல்ல சூழ்நிலைகளெல்லாம்போய்ப் புதியசூழ்நிலைகள்ஏற்பட்டுள்ளன; பொருத்தமற்ற புதிய சூழ்நிலைகள்மூலம்மாணவரின்கல்விநிலை சீர்குலைந்து வருகிறது; அதனால்எமது வருகாலச்சந்ததியினரின் கல்வி எவ்வித கஷ்டநிலைக்குள்ளாகுமோவென்று நாம அஞ்சவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்என்பதைப் பெற்றோர்ஒவ்வொருவரும் உணரவேண்டு"மென்று உரும்பராய் வித்தியாசாலையொன்றின் புதியகட்டடத் திறப்புவிழாவின்போது வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கத் தலைவர் பண்டிதர் எஸ். பொன்னுத்துரைஅவர்கள் பேசியிருக்கின்றார்.

## பொலிஸ்தலைவரின் உத்தரவு

பொலிஸ் நிலையங்களிலே தமிழில் அளிக்கப்படும் வாக்குமூலங்களைத் தமிழிலேயே பதிவுசெய்ய வேண்டுமெனப் பொலிஸ் இன்ஸ்பெக்றர்-ஜெனறல் சகல பொலிஸ்நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். பொலிஸ் நிலையங்களிலே தமிழில் கொடுபடும் வாக்குமூலங்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரம் பதிவுசெய்யப்படுவதாகவும், அதனால் தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பெரும்கஷ்டம் ஏற்படுவதாகவும் முறையீடு செய்யப்பட்டதன் பேரிலேயே இந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாக்குமூலங்களைத் தமிழில் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் பொலிஸ்நிலையங்களில் இப்போது செய்யப்பட்டுள்ளன.

## விரைவிலே நடைபெறுமா

1970ஆம்ஆண்டுதான் பாராளுமன்ற அடுத்தபொதுத்தேர்தல் நடைபெறுமென்று இராசாங்கமந்திரி அறிவித்துள்ளபோதிலும் அதிகம்விரைவிலே பொதுத்தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளைப் பிரதமர் மேற்கொண்டிருப்பதாக அரசியல்வட்டாரங்களில் கருதப்படுகிறது. வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் சுகாதார, சமூகசேவா, நீதிமந்திரிகளும் திருப்பி அழைக்கப் பட்டிருக்கிறார்கள். பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்தபோதிலும் அடுத்தபெரும்போக அறுவடைக்குப்பின்னரே தேர்தல் நடத்துவது நல்லதென்று அரசாங்க கட்சியைச்சேர்ந்த சிலர்அபிப்பிராயம் தெரிவித்துள்ளனராம்.

## அரசியற்கட்சிகளின் நிலைமை

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த 12எம். பி.களும் வெளியேறியபின் அரசாங்க கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் பலம் வருமாறு :

| அரசாங்க கட்சி | |
|---|---|
| ஐக்கியதேசிய கட்சி | 65 |
| என். எல். எல். எவ். பி. | 5 |
| தமிழ்க்காங்கிரஸ் | 3 |
| எம். ஈ. பி. | 1 |
| நியமனம் | 6 |
| | 80 |

| எதிர்க்கட்சி | |
|---|---|
| சுதந்திரக்கட்சி | 41 |
| சமசமாஜகட்சி | 10 |
| கம்யூனிஸ்தகட்சி | 4 |
| கம்யூனிஸ்தகட்சி (சீன) | I |
| எஸ். எம். பி. | 1 |
| ஜே. வி. பி, | 1 |
| சுயேச்சை | 6 |
| | 64 |

தமிழரசுக்கட்சி ஒருதனிக்கோஷ்டியாக இயங்கிவரும். சபாநாயகர் கட்சிச்சார்பற்றவராய் இருந்துவருவார்.

## ஒருபைந்து ஐம்பதுரூபா

யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரிஇரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள இரத்ததட்டுப்பாடுகாரணமாக ஒருபைந்து இரத்தத்தின்விலை ஐம்பதுரூபா ஆகிவிட்டது. அதாவது அவசரசிகிச்சைகளுக்கு இரத்தம்தேவைப்படுகிறவர்கள் இந்தவிலைகொடுத்துத்தான் இரத்தம்வாங்கவேண்டிய நிலைமைஏற்பட்டுள்ளது. இவ்வாறு பணம்வாங்கிக்கொண்டு இரத்தம் வழங்குவதற்கென இங்கேபலரும் தயாராயிருக்கிறார்கள். இதற்கெனத் தரகர்கூட்டம்ஒன்றும் இருந்துவருகிறது.

## புதிய தானியக் களஞ்சியம்

காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலையின் மின்சாரக்கட்டடம் உணவுப்பகுதியின் தானியக்களஞ்சியமாக மாறவிருப்பதாய்த் தெரியவருகிறது.

சீமெந்துத் தொழிற்சாலையின் மின்சார நிலைய கட்டடம் வேறிடத்துக்கு மாற்றப்பட விருப்பதாலும், காலியாகும் பழையகட்டடம் துறைமுகத்துக்குச் சமீபமாக அமைந்திருப்பதாலும் இது உணவுப்பகுதியின் தானியக் களஞ்சியமாகும்போது காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அதிகமான உணவுக் கப்பல்கள் வரக்கூடியதாயிருக்கும்.

## பலாப்பழம்....

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டமுடியும் என்று மனதில் எண்ணிக்கொண்டே அங்குரார்ப்பண விழாவில் பங்குகொண்டேன். விருந்தில் அளிக்கப்பட்ட பற்றிஸ், பழாகங்களையும் ஒரு கைபார்த்தேன். கட்டளைச் சாமியாருக்கு ஒரு "தாங்யூ" போட்டுவிட்டுப் பறந்தேன் விண்ணில. கீச் !... கீச் !...

அன்று ஞாயிறுவாரம் !... பத்திமா அன்னை கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் பண்டத்தரிப்புப் பழம்புகழ் பெரும்பதியின் பங்குக் கோவிகளிலலொன்றில் பூசைப்பலி ! ... ஞாயிறுவாரக் கடமையைத் தீர்ப்பதற்காக நுழைந்தேன். கட்டளைச் சாமியார் பிரசங்கம் வைத்துக்கொண்டிருந்தார். அவரது தாடியையும் நிறத்தையும் கண்டவுடனே "வெள்ளைக்காரச் சாமியார்" போலும் என்று எண்ணினேன். சே !... சே !... அசல் யாழ்ப்பாணத்தவர்தான். அவருடைய பிரசங்கம்தான் என்னரசிப்பு !...போங்கள் !... ஞாயிறுவாரத்தில் நோயாளியைக் குணமாக்கிய யேசுவை எதிர்த்து முணுமுணுத்துக்கொண்டிருந்த பரிசேயரைப்பற்றிய போதனை, இன்றைய வத்திக்கான் பொதுச்சங்கத்தின் புதியகொள்கைகளைப் பின்பற்றப் பின்வாங்கும் சில கிறிஸ்தவர்களின் அறியாமைக் கொள்கைகளை என்னமாய்ப் படம் பிடித்தார் அந்தச் சாமியார். "தற்செயலாக வெள்ளிக்கிழமை இறைச்சியைச் சாப்பிட்டுவிட்டேனே ஐயோ சாமி! பெரியபாவஞ் செய்துவிட்டேனே !" என்கிறார்கள் பாவசங்கீர்த்தனத்தில். புதிய ஒழுங்கின்படி வெள்ளிக்கிழமைகளில் இறைச்சி சாப்பிடலாம் பாவமில்லை என்று சுவாமிமார் மேற்றிராணிமார் சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். அடுத்தவீட்டுக்கிழவி சொல்லிவிட்டாளாம் பாவமென்று. ஆனால் சற்பிரசாதம்பெற்ற அடுத்த நிமிடம் கோவில் விறாந்தையிலேயே பல பத்தியுள்ள ஸ்திரிகள்கூடி "அந்தப்பெண்ணும் இந்த ஆடவனும் தவறிநடக்கிறார்களாம்" என்று அரைமணித்தியாலத்திற்கு ஆவலாதி அளக்கிறார்கள். அதுபாவமாகப் படுவதில்லையே இவர்களுக்கு. என்னமாதிரியான பரிசேயரோ ! ..." என்றெல்லாம் அழகாகத் திட்டி முழக்கினார். தனக்கே உரிய தனிப் பாணியில் ரசிப்பாகப் போதனை செய்யும் சுவாமியாருக்கு ஒரு 'சலூட்' அடிச்சேன் பூசைமுடிவில். யாரு நீ !... என்று கேட்டார். "தெரியலையாசாமி ! ... போகப் போகத் தெரியும் !..." என்று சினிமா மெட்டு ஒன்றைமுழக்கிக்கொண்டே மெல்ல நழுவிவிட்டேன். கீச் !...கீச் !...கீச் !...

## கனிஷ்ட சர்வகலாசாலைகள்

காலி, தெஹிவலை, கேகாலை, குளியாப்பிட்டி, பலாலிஎனும இடங்களில் நவமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐந்து கனிஷ்ட சர்வகலாசாலைகளிலும் பயிற்சிபெற நாடுமுழுவதிலுமிருந்து ஆயிரம்மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் அவற்றிலே பயின்று டிப்ளோமாபட்டம் பெறுவார்கள்.

## மரணம்

இறப்பு எப்போ(து) வருமென்று
 எவரும் அறியார், இவ்வுலகில்
பிறப்பு என்றொரு தொடக்கமிருந்தால்
 பின்னதற்கொரு முடிவுவேண்டும்.

ஒவ்வொரு மனிதன் வாழ்நாளும்
 ஒருவனால் திட்டமாய் எண்ணி
இவ்வளவு காலந்தானென்று
 இறுதியாய் எழுதியவன் விட்டான்.

சிறியவர் பெரியவர் என்று
 சிறிதும் அவன் பார்ப்பதில்லை
உரியவர் எவரோ அவனுக்கு
 உடனவரை அழைத்துக் கொள்வான்!

பூவும், பிஞ்சும் கனிக்குமுன்
 பூமியில் வீழ்ந்து அழிவதுண்டு
சாவினது ஆட்சியிலுமிந்தச்
 சத்தியம் பொய்ப்பதில்லை!

பழுத்தோலை வீழ்வது பார்த்துப்
 பரிகாசஞ் செய்யுங் குருத்தோலை
எழுத்தோலை தன்னை எடுத்து
 எழுதியோன் கிழித்தால் என்னாகும்?

வரவும் செலவும்போல
 வருவது பிறப்பும், இறப்பும்
இரவும், பகலும் போல
 இன்பமும், துன்பமும் மாறும்.

நேற்று நம்மோடிருந்தவர்
 நெஞ்சிற்கு நினைவாகி, உருவிலாக்
காற்றோடு காற்றாக ஆனார்
 கண்ணுக்குத் தெரியாது போனார்.

சென்றவனைத் தொடர்ந்து, நமக்கும்
 செல்ல ஒருநாள் வரும்
வென்றவன் சாவை என்றவன்
 மண்ணில் யாரும் இல்லை!

நிலையாக வாழ்வதற் கிந்த
 நிலத்திற்கு நாம் வரவில்லை
நிலையில்லா இவ்வுலகு வாழ்வு
 நீரின்மேற் குமிழியாகும்.

செத்தவன் பிணமாகிக் கிடக்கிறான்
 சேர்ந்தவர் கண்ணீர் வடிக்கிறார்
சுத்தப் பைத்தியக்காரர், அந்தச்
 சுடுகாடு இவர்களுக் கில்லையோ?

எஸ். அரியரெத்தினம்

❀ உங்கள் செல்வத்தையெல்லாம் மக்களுக்கு நீங்கள் அள்ளிக்கொடுக்க வேணடியதில்லை. மலர்ந்தமுகத்துடன், இனிய பண்புடன் அவர்களிடம் பழகுங்கள் அதுவே போதும்.

## தீவுப்பகுதி......

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

யாரால் சற்பிரசாத ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

பின்னர் இச்சற்பிரசாத சமாகமத்தை இவ்வளவு பத்திச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வேண்டிய பொருள் உதவி, சரீர உதவிசெய்த தீவுப்பகுதி மக்களுக்கும், குருமார், கன்னியாஸ்திரிமார்களுக்கும், விசேஷமாகப் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியார் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஊர்காவற்றுறைப் பங்குக் குரவர் வண. சுவாம்பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறினார்.

ஈற்றில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களால் 'பலி அமுத விருந்து' என்னும் நாடகமும் நாடகத்தின் அம்சங்களுக்குரிய நிகழ்ச்சிகள் நடனங்களாக முறையே ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பெண்பாடசாலை, கரம்பன் சிறிய புஷ்ப மகளிர்பாடசாலை, கரம்பன் புனித செபஸ்தியார் தமிழ்பாடசாலை மாணவிகளாலும் காண்பிக்கப்பட்டன.

மக்கள் அனைவரும் சற்பிரசாதநாதரின் ஆசீரைப்பெற்று மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஆண்டு புரட்டாசிமீ 28-ந்தேதி சனிக்கிழமை அச்சிட்டுப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org